CPA

CENTRE FOR POLICY ALTERNATIVES

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
## அறிக்கை -73 வருடகாலச் சுதந்திரம்

***பெப்ருவரி 2021, கொழும்பு, இலங்கை :*** இலங்கையின் 73 வது சுதந்திர தினம் இடம்பெறவுள்ள நிலையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கையில் இனத்துவ-மத உறவுகள் மற்றும் ஜனநாயக நிறுவனங்களுக்கான அச்சுறுத்தல் நிலை குறித்துத் தனது ஆழமான கரிசனைக் கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இக்கரிசனை விடயங்கள் உலகளாவிய பெரும் பரவல்நோய் குறித்த இதுகாலவரை இடம்பெற்றிராத சவால்கள், அதிகரித்த அளவிலான எதேச்சாதிகார, இராணுவமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை, நிலைபேறாக்கப்பட்ட தண்டனைப்பயமின்மை மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கு அதிகரிக்கும் வகையிலான அச்சுறுத்தல் குறித்த சூழமைவிலேயே எழுகின்றன. இது புதிய மட்டங்களிலான கவனக் கண்காணிப்பு, குற்றச் செயல்களுக்குத் தூண்டுதல், மற்றும் சிறுபான்மையினரை இலக்குவைத்தல் என்பவை காரணமாக மாற்றுக்கருத்துக்கான வாய்ப்பு வழிகள் சுருங்கிச்செல்லும் ஒரு காலநிலையாகும். CPA ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, ரம்ஸி ராசீக் மற்றும் அத்நாப் ஜசீம் போன்றவர்கள் உள்ளிட்டவகையில் எழுத்தாளர்கள், சட்டவல்லுநர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் தொடர் கைதுகள் மற்றும் தடுப்புக்காவல் என்பவற்றை அவதானிக்கின்றது. இந்த விடயங்களில் உரிய சட்டச்செயல்முறை உத்தரவாதங்கள் சீர்குலைக்கப்பட்டுள்ளமையால், இந்தக் கைதுகளின் பின்னால் உள்ள உண்மையான செயலூக்க ஆர்வம் குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. CPA கொவிட்-19 மரணங்களுக்குப் பின்னர் இறந்த உடல்களை வலிந்து தகனம்செய்யும் முடிவைத் திணிக்கும் எதேச்சையான தீர்மானம் குறித்தும் ஆழமான கரிசனையை வெளிப்படுத்துகின்றது. இது இலங்கையிலுள்ள முஸ்லீம் சமூகத்தை நேரடியாகப் பாதித்து, ஓரங்கட்டும் அடிப்படையிலமைந்த, விஞ்ஞான அடிப்படை எதுவுமற்ற கொடூரமான கொள்கைத் தீர்மானமாகும்.அரச கொள்கையில் சிங்கள-பௌத்த இனத்துவத் தேசியவாதத்தின் அதிகரிக்கும் செல்வாக்கு இக்கவலையளிக்கும் விடயங்களை மேலும் மோசமாக்குவதாக அமைந்துள்ளது. இதைப் பல முன்னணிப் பௌத்த குருமார் வகிக்கும் செல்வாக்குமிக்க பாத்திரத்திலும், தேர்தல் அரசியலிலும், சகவாழ்விலும், நீண்டகாலத் தாற்பரியங்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய வகையில் நாட்டின் வடக்கு, கிழக்கில் இனத்துவக் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் முறைமையான பிரயத்தனங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது.

சுதந்திர தினமென்பது, சுதந்திரத்துக்குப்பின்னர் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் முக்கியமான தோல்விகளை விளங்கிக்கொள்வதற்கான பெறுமதிவாய்ந்த சந்தர்ப்பமாக அமைகின்றது. குறிப்பாக, இவை செழிப்பை பிரஜைகள் அனைவரும் பகிர்ந்துகொள்ளக்கூடிய வகையில் ஒரு சமாதானமான, ஸ்திரநிலைகொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதில் ஏற்பட்ட தோல்விகளாகும். கடந்த வருடத்தில் அரசாங்கம் இலங்கையில் இனத்துவ உறவுகளை மேம்படுத்தும் வகையில் எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது மாத்திரமன்றி, அரசாங்கக் கொள்கைகள் இனத்துவப் பதற்றநிலைகளைத் துடிப்பாக மோசமாக்கி,ஜனசமூகங்களை ஓரங்கட்டியுமுள்ளது. இது விடயத்தில் அரசாங்கத்தின் தோல்வி தமக்கு வாக்களித்தவர்களுக்கு மாத்திரமே தாம் பொறுப்புள்ளவர்கள் என்னும் தவறான நம்பிக்கையும், இலங்கையின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்த அரசியல் முரண்பாடுகளைச் சரியாக அறிந்துகொள்ளும் ஆற்றலின்மை என்பவற்றால் உந்தப்படுகின்றது.

கடந்த வருடங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கான வகைப்பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும் விசாரணைகள் மற்றும்வழக்குத்தொடரல்களுக்கு வழிசெய்தவர்களை இலக்கு வைப்பதையும் CPA மேலும் அவதானிக்கின்றது. இது விடயம் சம்பந்தமான ஒரு சமீபத்திய அபிவிருத்தி தொடரும் மற்றும் கடந்தகால நீதிமுறைசார் செயல்முறைகளின் நேர்மைத் திறன் குறித்துப் பாரதூரமான கரிசனைகளை எழுப்பும் அரசியல் பழிவாங்கல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையாகும். இதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்துவரும் அதேவேளையில், கடந்தகாலத் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்செயல்கள் சம்பந்தமான இதற்கு முந்திய ஆணைக்குழுக்களின் மட்டுப்பாடான விதப்புரைகளைக்கூட நடைமுறைப்படுத்துவதற்கு எதுவுமே செய்யப்படவில்லை. இதற்கு முந்திய ஆணைக்குழுக்களின் விதப்புரைகள் குறித்து விசாரித்து,அவற்றைத் "தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கிசைவாக நடைமுறைப்படுத்துவதற்கு" ஜனவரியில் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது ஆழமான கவலையை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும். இது

உண்மையான நடவடிக்கைச் சாத்தியம் எதுவுமே இல்லாத இத்தகைய ஆணைக்குழுக்களின் நீண்ட பட்டியலுக்கு மேலும் புதிய ஆணைக்குழுக்களைச் சேர்ப்பதற்கே உதவும்.

இது ஒரு பெரும் பரவல் நோயின் காலப்பகுதியும், ஆடம்பரச் சோடனைக் காட்சிகளுக்கப்பால், நாட்டில் நிலவும் கவலையூட்டும் யதார்த்தம் குறித்து மீண்டும் சிந்திக்கவேண்டிய முதலாவது சுதந்திர தினமுமாகும்.பல இலங்கையர்கள் எதிர்நோக்கும் கட்டமைப்புசார் சமத்துவமின்மைகள் மற்றும் கஷ்டநிலை என்பவற்றை வெளிச்சமிட்டுக்காண்பிக்கும் ஒரு பொருளாதார நெருக்கடியால் நிலைமை மேலும் மோசமடைவதை CPA அவதானிக்கின்றது. இப்பொருளாதார மற்றும் சமூகச் சவால்கள் அவசரமான கவனத்தை வேண்டிநிற்கின்றன. இன்றுவரை, மேலும் அதிகமான நடவடிக்கைக் குழுக்களை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துவது, முன்னாள் மற்றும் இன்றைய இராணுவ அதிகாரிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது மற்றும் வேளைக்கேற்ற உதவித் திட்டங்களில் தங்கியிருப்பது குறித்த உத்தியோகபூர்வ வார்த்தை அலங்காரங்கள் தவிர்ந்த வகையில், கட்டமைப்புசார் விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் அனைத்துமடங்கும் திட்டம் எதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

பல உரிமைமீறல்களை ஆவணப்படுத்தும் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) வெளியிட்ட அறிக்கையின் பின்புலத்திலும் சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது. இந்த அறிக்கை கடந்தகாலத் துஷ்பிரயோகங்களின் பாரம்பரியத்துக்குத் தீர்வு காண்பதில் இலங்கை முயற்சிகளை மேற்கொள்வதில் பின்நிற்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கும்,அங்கத்துவ அரசுகளுக்கும், ஐக்கிய நாடுகள் அமைப்புக்குமான ஒரு பரிந்துரைகள் பட்டியலைக் கொண்டுள்ளது. அது தற்போதைய சூழமைவில் இலங்கையில் மனித உரிமைகள், நீதி மற்றும் மீளிணக்கம் சம்பந்தமான விடயங்களுக்குத் தீர்வு காண்பதில் மிகக்குறைந்த முன்னேற்றமே சாத்தியம் என்பதைச் சுட்டிக் காண்பித்துள்ளது. இந்த அறிக்கையினதும், இலங்கையில் கவலையூட்டும் வகையிலான ஏனைய அபிவிருத்திகளையும் சுட்டிக்காட்டும் ஏனைய ஆவணங்களினதும் ஒளியில், இலங்கையின் குடிமக்களின் சகல பிரஜைகளினதும் நலன்களுக்கு எதிரானவகையில் இராஜதந்திர நிலைப்பாடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, இக்கரிசனை விடயங்களுக்குத் தீர்வுகாணும் வகையில் பொறுப்புடன் செயற்படுவது இலங்கை அரசாங்கத்தின் முதனிலைப் பொறுப்பாகும். அரசாங்கம் தனது குடிமக்கள் சகலரினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட முடியாதிருந்தால் அல்லது விருப்பமின்றி இருந்தால் OHCHR அறிக்கையின் தேடல் முடிவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் தொடரும் மீறல்களுக்கும், கடந்தகால துஷ்பிரயோகங்களுக்கும் தீர்வுகாணும் நடவடிக்கைகளுடன் கூடிய ஒரு வலுவான தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு CPA உள்மையக் குழுவுக்கும், அங்கத்துவ அரசுகளுக்கும் வலியுறுத்துகின்றது. இத்தகைய ஒரு முன்முயற்சி இலங்கையில் மனித உரிமைகளுக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும், வகைப்பொறுப்புக்கும் மற்றும் மீளிணக்கத்துக்கும் முக்கியம் வாய்ந்ததாகும்.

இவ்வாறாக, இவ்வாரக் கொண்டாட்டங்கள் எவ்வாறு அமைந்திருந்தபோதிலும், இலங்கையிலுள்ள நிலைமை பாரதூரமான கரிசனை விடயமாகவுள்ளது. விளைவுகள் இந்தத் தடவை வித்தியாசமாக இருக்கும் என்னும் தவறான நம்பிக்கையுடன் வரலாற்றுத் தவறுகள் மீண்டும் இழைக்கப்படுகின்றன. வழக்கம்போலவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றச் செயல்முறை குறித்த பெரும் கூச்சல் இடம்பெறும்வேளையிலும், வார்த்தைஅணிச் சொல்லாடல் கவனத்தைத் திசைதிருப்பும் வகையிலேயே இடம்பெறும். CPA வழங்கப்படக்கூடிய வாக்குறுதிகள் குறித்துக் கவனமாக இருக்குமாறும், நாட்டில் நிலவும் உண்மையான அபாயகரமான விடயங்கள்குறித்துக் கவனம் செலுத்தவேண்டிய தேவை குறித்தும் வலியுறுத்துகின்றது. இங்கு காணப்படும் போக்குகளை உதாசீனம் செய்தலாகாது. இலங்கையின் பலவீனமான ஜனநாயகத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை அனைவரும் உறுதியாகவும், சமாதானமாகவும் எதிர்த்துநிற்கும் காலம் வந்துள்ளது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org